
# கொழும்பு மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்களின் மூலம் பிரஜைகள் சாசனத்திற்கு இணங்க பொது மக்கள் சேவைகளை நிறைவேற்றுவது தொடர்பான செயலாற்றல் மதிப்பீடு





தேசிய கணக்காய்வு அலுவலகம்

கணக்காய்வு கிளை WNP/CB/A

## உள்ளடக்கம்


| இலக்கம | விபரம் | பக்கம் |
|---|---|---|
| 1 | நிறைவேற்றுப் பொழிப்பு | 1-4 |
| 2 | அறிமுகம் | 4 |
| 2.1 | நிறுவனத்தின் பின்னணி | 4-6 |
| 2.2 | பிரதேச செயலகங்களின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான பணிகள் | 7 |
| 2.3 | பிரஜைகள் சாசனத்தின் மூலமும் ஏனைய வகையிலும் பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் | 8 |
| 2.4 | ஏனைய செயற்பாடுகள் | 9 |
| 2.5 | கணக்காய்வு விடயப் பரப்பு | 9 |
| 2.6 | கணக்காய்விற்கான அதிகார எல்லை | 9 |
| 2.7 | தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணங்கள் | 9-10 |
| 2.8 | கணக்காய்வின் நோக்கங்கள் | 10 |
| 2.9 | கணக்காய்வு நியதிகள் | 10-12 |
| 2.10 | கணக்காய்வு அணுகுமுறை | 12 |
| 2.11 | பிரதேச செயலகங்களில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது தொடர்புறும் ஏனைய நிறுவனங்கள் | 12-13 |
| 3 | கணக்காய்வு அவதானிப்புக்கள் | 13 |
| 3.1 | பிரஜைகள் சாசனத்தின் பிரகாரம் செயற்படுதல் | 13 |
| 3.1.1 | பிரஜைகள் சாசனம் தொடர்பாக அறிவூட்டுதல் | 13-14 |
| 3.1.2 | பிரஜைகள் சாசனம் மேம்படுத்தல் கட்டம் | 15 |
| 3.1.3 | உரிய நேரத்திலான பிரஜைகள் சேவை சாசனம் | 15-17 |
| 3.2 | அலுவலக வளவில் காணபப்ட வேண்டிய தேவைப்பாடுகள் | 17 |
| 3.2.1 | சேவை நியமங்களை முறையாக ஸ்தாபித்தல் | 17-18 |
| 3.2.2 | மனித வள முகாமைத்துவம் | 18-20 |
| 3.2.3 | பௌதீக வள முகாமைத்துவம் | 20 |
| 3.2.3.1 | பதவியணிக்காக காணப்படும் பௌதீக வளங்கள் | 20-22 |
| 3.2.3.2 | பொது மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்கள் | 22-23 |
| 3.3 | பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல் | 23 |
| 3.3.1 | பிறப்பு, விவாக, மரண சான்றிதழ் பிரதிகளை வழங்குதல் | 23-25 |
| 3.3.2 | வருமான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் | 25-27 |
| 3.3.3 | சமூக சேவைகள் | 27-38 |
| 3.3.4 | சிறுவர் உரிமை மேம்படுத்தல் | 29-32 |

| | | |
|---|---|---|
| 3.3.5 | முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி | 33-34 |
| 3.3.6 | போதைப்பொருள் பேரழிவு கட்டுப்பாடு | 34-36 |
| 3.3.7 | பிரதேச நிர்வாகத்திற்காக காணப்படும் குறைபாடுகள | 36-38 |
| 3.4 | பொது அவதானிப்புக்கள் | 39 |
| 4 | பரிந்துரைகள் | 40-41 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

-----------------------------

இலங்கையின் வர்த்தக தலைநகரான கொழும்பு மாவட்டத்தின் சனத்தொகை 2,577,350 ஆக இருப்பதுடன் அது 13 பிரதேச செயலகங்கள் மற்றும் 557 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளன. அரசாங்கத்தின் செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் வழிநடத்துவதன் மூலமும், மாகாண சபையுடன் நேரடி ஒருங்கிணைப்பை பேணுவதன் மூலமும், மாவட்ட செயலகங்களிலிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதன் மூலமும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், மக்களுக்கு திறமையான சேவைகளை வழங்குவதுமே அனைத்து பிரதேச செயலகங்களின் முக்கிய குறிக்கோளாகும்.

பிரதேச செயலகத்தின் மூலம் கிராம சேவையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அடிப்படை நிர்வாக நடவடிக்கைகளையும் அதாவது பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கல், வாகன அனுமதிப்பதிரங்களை வழங்குதல், தேசிய அடையாள அட்டைகளின் விண்ணப்பங்களை ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் போன்ற செயற்பாடுகள் முதல் பொது மக்களின் அனைத்து விடயங்களிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பரந்த அளவிலான சேவைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, எம்மால் மேற்கொள்ளப்பட்ட இந்த செயலாற்றல் கணக்காய்வின் இந்த பண்முகப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றும் போது பொது மக்களுக்கு அச்செயற்பாடுகளை வினைத்திறமையாகவும் திறமையாகவும் நிறைவேற்றிக்கொள்ள முடியுமா என்பதை பரீட்சிப்பதே நோக்கமாகும்.

கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களில் நூற்றுக்கு 75 மக்களை உள்ளடக்கிய கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, கடுவெல, திம்பிரிகஸ்யாய, மொறட்டுவ, ஹோமாகம, கொலொன்னாவ மற்றும் கெஸ்பவ ஆகிய 08 பிரதேச செயலகங்கள் தெரிவு பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்டதுடன் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பதிவாளர் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் பிறப்பு, இறப்பு மற்றும் விவகாகச் சான்றிதழ்கள், என்பவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கு போதியளவில் பதிவறை வசதிகள் இல்லாமல் இருந்ததுடன் பாதுகாப்புக்கு பயன்படுத்தப்பட வேண்டிய தீயணைப்பு உபகரணங்கள், கெமரா முறைமைகள் நிறுவப்படாமல் இருந்ததுடன், பொதுமக்களின் தகவல்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும், இச் செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமாக இருக்கவில்லை. இதற்கான காரணங்களாக, பெற்றோரின் அலட்சியம் மற்றும் கல்வி தொடர்பான தவறான விளக்கம், தாய் அல்லது தந்தை சிறையில் இருத்தல், வெளிநாடுகளுக்குச் செல்லும் தாய்மார்கள் காரணமாக வேறு பாதுகாவலர்களுடன் வாழும் குழந்தைகள், பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் போது அதிபர்கள் அப்பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்க தயங்குதல், பிள்ளைகள் பல்வேறு வகையான துஷ்பிரயோகங்களுக்கு அடிமையாவதை குறிப்பிடலாம்.

கொழும்பு மாவட்ட செயலகத்துக்கு உரிய பிரதேச செயலங்களின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணக் கூடிய மிகவும் சக்தி வாய்ந்த பேரழிவாக போதைப் பொருள் ஆபத்து பரவி வருவதைக் குறிப்பிடலாம். குறிப்பாக கொழும்பு, கொலன்னாவ, திம்பிரிகஸ்யாய, மொறட்டுவ போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளுக்குள் உள்ளடங்கும் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் போதைப் பொருள் அபாயம் பரவிக் காணப்படுவதாக தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளதோடு, அதனால் எழக் கூடிய சமூக சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக பிரதேச செயலகம் தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் அவை அந்தளவுக்கு பலனளிக்கவில்லை. அதாவது ஆலோசனை சேவைகளை வழங்குதல், பிள்ளைகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்புதல், பெற்றோருக்கு அறிவூட்டல் வழங்குதல், பாடசாலை மட்டத்தில் அறிவூட்டல் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட போதிலும் பிள்ளைகளுக்கு சமூக ரீதியாக நல்ல செயற்பாடுகளில் ஈடுபட ஊக்கமளிக்கப்படாத காரணத்தாலும், பெற்றோர்கள் கூட போதைப் பொருளுக்கு அடிமையாக இருப்பதன் காரணத்தாலும் மொத்த சமூகத்தையுமே இருளுக்குள் தள்ளிவிடும் அபாயம் மிக்கதாக போதைப் பொருள் ஆபத்து காணப்படுகிறது. இந்த போதைப் பொருள் அபாயம் காரணமாக பிள்ளைகள் பெற்றோரின் பாதுகாப்பையும், பாசத்தையும் இழந்து விடுதல், பிள்ளைகளுக்கு சமூக ரீதியாக பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுவதால் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவதால், குறைந்த வயதில் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளல், பொருளாதார வசதி அற்ற குடும்பச் சூழலைக் கொண்ட பிள்ளைகள் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற சட்டவிரோதமான செயல்களின் மூலமாக பணம் சம்பாதித்தல் போன்ற சமூக ரீதியான சிக்கல்கள் பலவும் தோன்றியுள்ளன.

சமூக சீரழிவுகளுக்கு உள்ளாகும் பிள்ளைகள் உரிய வயது வரும் முன்பே திருமண பந்தங்களில் இணைந்து கொள்வதால் அவர்களும் இந்த மோசமான சமூகத்தின் தீய

வட்டத்தில் ஒரு அங்கமாக ஆகி விடுவதோடு அவர்களது பிள்ளைகளும் அந்தத் தீய வட்டத்துக்கே இரையாகி விடுகிறார்கள். இவ்வாறான குறைந்த வயது திருமணங்கள் காரணமாக கல்வி நடவடிக்கைகள் சீர் குலைதல், பொருளாதாரச் சிக்கல்கள் உருவாகுதல், இனிமையான சிறுபராய வாழ்க்கையை இழத்தல், தம்பதிகளிடையே பிரச்சினைகள் தோன்றுதல், குழந்தை மரணங்கள் அதிகரித்தல், மன அழுத்தங்கள் ஏற்படுதல், திருமண வாழ்க்கை தோல்வியடைதல் போன்ற சமூக ரீதியான சிக்கல்கள் பலவும் தோன்றியுள்ளன.

பொது மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்க, கிராம சேவையாளர்களுக்கும், பிரதேச செயலகத்தில் பணி புரியும் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு வசதிகள் இல்லாத காரணத்தால் பொது மக்கள் சிரமத்துக்கு ஆளாவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கொழும்பு மாவட்டத்தில் 557 கிராம சேவையாளர் பிரிவுகளில் 248 பிரிவுகளுக்கு தமது அலுவலகப் பணிகளை ஒழுங்காக மேற்கொள்வதற்கான இட வசதிகள் இல்லாமல் காணப்படுவதன் காரணமாக, சேவைகளைப் பெற்றுக் கொள்ள வரும் பொது மக்கள் சிரமங்களுக்கு உள்ளாவது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கிராம சேவையாளர்களுக்கு தமது பணி ஆவணங்களை வைத்துக் கொள்ளக் கூட போதியளவு இட வசதியோ, அலுவலக உபகரணங்களோ இல்லை. இவ்வாறான நிலைமையில் கிராம மட்டத்தில் வசிக்கும் ஓய்வு பெற்றவர்கள், அங்கவீனர்கள், அரச காணிகள் தொடர்பான விவரங்கள், நீண்ட கால குத்தகை காணிகள், வருடாந்தக் குத்தகை இடங்கள், சமுர்த்தி பெறுபவர்கள், நோய்களுக்கான உதவித் தொகை பெறுபவர்கள் போன்றவை குறித்த விபரத் திரட்டுகளை தொடர்ச்சியாகப் பேணி வர இயலாத நிலைமைக்கு கிராம சேவையாளர்கள் ஆளாகியுள்ளனர். இந் நிலைமையில் கிராம மட்டத்தில் உதவி பெறுபவர்கள் மற்றும் பெறத் தகுதியுள்ளவர்களை ஒழுங்கான முறையில் இனங்கண்டு கொள்ள இயலாத காரணத்தால் தகுதியுள்ளவர்களுக்கு உரிய சேவைகள் கிடைக்காதிருக்கும் இடரொன்று காணப்படுவதோடு பொது மக்கள் சேவை சிறந்த முறையில் நடைபெறாததற்கு இந்தக் குறைபாடுகளும் பங்களித்துள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு இணங்க, சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் பல்வேறு உதவித் தொகைகளை வழங்கும் போது, வழங்கப்படாமல் மீள ஒப்படைக்கப்படும் பணத்தைத் துல்லியமாகப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், போதைப் பொருள் அபாயம் பரவலாகக் காணப்படும் பிரதேசங்களில் அந்த ஆபத்தை அகற்றுவதற்கு ஏனைய அரச நிறுவனங்களை (பொலிஸ், பாடசாலை) தற்போது காணப்படுவதை விடவும் தொடர்ச்சியாக பங்களிப்புகளை மேற்கொள்ளச் செய்தல், குறைந்த வயது

திருமணங்களைத் தவிர்க்க பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தத் தேவையான நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக செயற்படுத்தல் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு ஒழுங்கான விதத்தில் அலுவலக வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான முறையான ஒழுங்குமுறைகளைத் தயாரித்தல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

## 2. அறிமுகம்

---------------

இலங்கையின் வர்த்தக தலைநகரான கொழும்பு மாவட்டத்தின் சனத்தொகை 2,577,350 ஆக இருப்பதுடன் அது 13 பிரதேச செயலகங்கள் மற்றும் 557 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளன. அரசாங்கத்தின் செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் வழிநடத்துவதன் மூலமும், மாகாண சபையுடன் நேரடி ஒருங்கிணைப்பைப் பேணுவதன் மூலமும், மாவட்ட செயலகங்களிலிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதன் மூலமும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், மக்களுக்கு செயற்திறனான சேவைகளை வழங்குவதே அனைத்து பிரதேச செயலகங்களின் முக்கிய குறிக்கோளாகும்.

### 2.1 நிறுவன பின்னணி

------------------------------

### 2.1.1 பிரஜைகள் சாசனம் தொடர்பான எண்ணக்கரு

----------------------------------------------------------------------------

2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் பிரஜைகள் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரச நிறுவனமொன்றிடமிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொது மக்களுக்கு தேவைகளை விரைவாகவும், செயற்திறனாகவும், தரமாகவும் தொடர்ச்சியாகவும் நிறைவேற்றுவதாக எழுத்துமூல கடப்பாட்டொன்றுடனான வகையில் உயர்ந்த வகையில் நிறைவேற்றி பொது மக்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக ஒவ்வொரு அரச நிறுவனமும் பிரஜைகள் சாசனத்தை ஸ்தாபித்தல் அவசியமென இதன்மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2.1.2 பிரஜைகள் சாசனத்தை தாபனமயமாக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய தத்துவங்கள்

-----------------------------------------------------------------------------------------------

பிரஜைகள் சேவைகள் சாசனத்தை அறிமுகப்படுத்துவதற்கான வழிகாட்டல் கோவையின் பின்னிணைப்பு "அ" 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜைகள் சாசனத்தை தாபனமயமாக்கும் போது கருத்தில்கொள்ள வேண்டிய 15 தத்துவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை கீழே தரப்பட்டுள்ளன.

(i) சேவை நியதிகளை தீர்மானித்தல் (பொது மக்கள் சேவை தேவைப்பாடு மற்றும் நிறுவனத்திடமுள்ள இயலளவினைக் கருத்திற்கொண்டு)

(ii) பொது மக்களுக்கு சரியான விடயங்கள் மற்றும் தரவுகளை வெளிப்படையாக வழங்குவதை உறுதிப்படுத்துதல்

(iii) பொது மக்கள் சமூகமளித்தல் மற்றும் ஆலோசணை

(iv) சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் பொது மக்களை உற்சாகமூட்டுதல் மற்றும் வெவ்வேறு சேவை வழங்கும் ஊடகங்களை பிரபல்யப்படுத்துதல்

(v) அனைவரையும் ஒழுக்கம் சார்ந்த வகையிலும், நட்புரீதியாகவும் நியாயமாகவும் கவனித்தல்

(vi) பிழையொன்று நிகழும் போது சரிசெய்தல்

(vii) செயற்திறனாக வளங்களை பயன்படுத்துதல்.

(viii) படைப்பாற்றல் சந்தர்ப்பங்களை வழங்குதல்

(ix) சேவைகள் வழங்கும் போது தொடர்புறும் ஏனைய சேவைகள் வழங்கும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுத்தல்

(x) ஏற்றுக்கொள்ளகூடியதாக இருத்தல் (உதா. செயலாற்றலின் செயற்திறன்)

(xi) பொறுப்பேற்றல் (உதா. உரிய நேரத்தில் வேலைகள் நிறைவேற்றுதல்)

(xii) நம்பகத்தன்மை (உதா. சேவை நாடுனர்களின் தேவைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்)

(xiii) தாராள தன்மையுடன்(உதா.தேவைப்பாட்டிற்கு முறையான கவனம் செலுத்துதல்)

(xiv) ஒழுக்கமான, கவனித்தல் மற்றும் சேவை வழங்குவதற்கு தயாராதல் (சேவை வழங்குவதற்கு விருப்பம், தயாராக இருப்பதாக குறிப்பிடல்)


(xv) விளங்கக்கூடிய இலகுவான வசனங்களை பயன்படுத்துதல்

### 2.1.3 பிரஜைகள் சாசனம் செயற்படுத்த வேண்டிய கட்டங்கள்

------------------------------------------

பிரதேச செயலகங்களில் பிரஜைகள் சாசனத்தினை செயற்படுத்தும் போது 05 கட்டங்களை பின்பற்ற வேண்டும்.

(i) பிரஜைகள் சாசனத்தினை முறையாக தயாரித்தல்
(ii) மேம்படுத்தல் கட்டம்
(iii) சேவைகளை நாளதுரையாக்கும் கட்டம்
(iv) பின்தொடர் நடவடிக்கை
(v) மதிப்பீடும் மேம்படுத்தலும்



## 2.2 பிரதேச செயலகங்களின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான பணிகள்

---

### (அ) தொலைநோக்கு

நல்லாளுகை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி மூலம் செயற்தினாகவும் வினைத்திறனாகவும் பொதுமக்களுக்கு உயர்ந்த சேவையொன்றை வழங்குதல்

### (ஆ) செயற்பணி

அரச கொள்கைகளுக்கு இணங்க சேவைகளை வழங்குதல், வளங்களை கூட்டிணைத்தல், மக்கள் பங்களிப்புடன் செயற்திறனான நிலைபேறான மற்றும் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் ஊடாக பிரதேச மக்கள் வாழ்க்கையை கட்டியெழுப்புதல்

### (இ) பிரதான செயற்பாடுகள்

(i) அலுவலக சேவைகளை பிரஜைகள் சாசனத்திற்கு இணங்க செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுதல்

(ii) வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் பண்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதி ஏற்பாடுகளை பிரிவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக திட்டங்களை தயாரித்து செயற்படுத்துதல்.

(iii) மதிப்புகளை மேம்படுத்துதல், ஆன்மீக வளர்ச்சி மற்றும் ஆரோக்கியமான குழந்தைகளின் தலைமுறையை உருவாக்குதல் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை செயல்படுத்துதல்.

(iv) வரலாற்று விழுமியங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் தொல்பொருள் பாதுகாப்பு, இலக்கியம் மற்றும் கலாச்சார புரிதலைப் பாதுகாப்பதை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(v) சமுர்த்தி பெறுவோர் மற்றும் பொதுசன உதவி பெறுவோர்களை வலுவூட்டல்

(vi) விதவைகள் மற்றும் அனாதை, ஓய்வூதியத்தை செலுத்துதல்,

## 2.3 பிரஜைகள் சாசனத்தின் மூலமும் ஏனைய வகையிலும் பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள்

| வழங்கப்படும் சேவைகள் | எடுக்கும் காலம் |
|---|---|
| ➢ வதிவிடச் சான்றிதழ் வழங்குதல் | 05 நிமிடங்கள் |
| ➢ பிறப்பு, விவாக, மரணச் சான்றிதழ் கணனி மூலம் வழங்குதல் | 05 நிமிடங்கள் |
| ➢ மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 05 நிமிடங்கள் |
| ➢ பெறுமதிச் சான்றிதழ் வழங்குதல் | 30 நிமிடங்கள் |
| ➢ வருமானச் சான்றிதழ் வழங்குதல் | 10 நிமிடங்கள் |
| ➢ மதிப்பீட்டுச் சான்றிதழ் வழங்குதல் | 30 நிமிடங்கள் |
| ➢ கால்நடைகளுக்கான போக்குவரத்து சான்றிதழ் வழங்குதல் | 30 நிமிடங்கள் |
| ➢ அடகு அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 1/2 நாள் |
| ➢ மதுமான அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 02 நாட்கள் |
| ➢ பலகைகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 15 நிமிடங்கள் |
| ➢ தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு சாதாரண தபாலில் அனுப்புதல் | வாரத்திற்கு ஒருமுறை |
| ➢ ஒரு நாள் சேவைக்காக தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை வழங்குதல் | 15 நிமிடங்கள் |
| ➢ அடகு அனுமதிப்பத்திரம் முதலாவது முறையாக வழங்குதல் | 02 வாரங்கள் |
| ➢ மரம் வெட்டும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 15 நிமிடங்கள் |
| ➢ பொதுசன உதவி அங்கீகரித்தல் | 02 கிழமைகள் |
| ➢ மின்சார எதிர்ப்பிற்கு பதில் அளித்தல் | 02 கிழமைகள் |
| ➢ நடாத்துனர் அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 15 நிமிடங்கள் |
| ➢ ஜனாதிபதி நிதியத்திற்கு பரிந்துரை வழங்குதல் | 10 நாட்கள் |

### 2.4 ஏனைய செயற்பாடுகள்

---------------------------------

(i) மதுபான அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல்

(ii) தனி மற்றும் பங்குடமை வியாபார பெயர்களை பதிவுசெய்தல்

(iii) துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களுக்கு பரிந்துரைத்தல்

(iv) மணல், கருங்கல், மண் அனுமதிப்பத்திரங்களுக்காக பரிந்துரை வழங்குதல்

(v) வெடிபொருட்கள் அனுமதிப்பத்திரங்களுக்கு பரிந்துரைகள் வழங்குதல்

(vi) இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக்கு பரிந்துரைகள் வழங்குதல்

### 2.5 கணக்காய்வு விடயப் பரப்பு

---------------------------------------------------

கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய காலம் மற்றும் மனித வளங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு கொழும்பு மாவட்டத்தின் சனத்தொகையை அடிப்படையாக கொண்டு மொத்த சனத்தொகையில் 75 சதவீதம் அளவில் மேவுகை செய்யப்படும் வகையில் கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களின் 08 பிரதேச செயலகங்களுக்குரியதாக பிரஜைகள் சாசனத்தை செயற்படுத்துதல் மற்றும் பொது மக்களுக்கு சேவைகள் வழங்குதல் தொடர்பாக செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அரசின் பண்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை.

### 2.6 கணக்காய்விற்கான அதிகார எல்லை

--------------------------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 3(1)ஈ, 5(2) மற்றும் 12 (ஏ) பிரிவுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 2.7 தலைப்பினை தெரிவுசெய்தமைக்கான காரணங்கள்

--------------------------------------------------------------------------------------

இலங்கையின் வர்த்தகத் தலைநகரமான கொழும்பு மாவட்டத்துக்கு பொது மக்கள் மையப்படுத்தப்படும் போக்கினை அவதானிக்கக் கூடியதாக இருந்தமை மற்றும் அதற்கு இணையாக அதிகரிக்கும் மக்கள் தொகைக்குத் தேவையான விதத்தில் பிரதேச செயலக அலுவலகங்கள் ஊடாக கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படும் அடி

மட்ட நிர்வாக சேவைகளிலிருந்து அனைத்து பொது மக்கள் சேவைகளையும் வழங்கும் போது பொது மக்கள் சிரமங்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாவது அவதானிக்கப்பட்டது.

பிரதேச செயலக அலுவலகங்களிலும், கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பணி புரியும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு போதியளவு வசதிகள் இல்லாமை மற்றும் பொது மக்கள் சேவைக்குத் தேவையான வசதிகள் இல்லாமை ஆகியவற்றால் பொது மக்கள் சேவையை செயற்திறன் மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் நிறைவேற்ற இயலாதுள்ளமைக்கு அதைப் பாதித்த காரணிகளை பகுப்பாய்ந்து கலந்துரையாடுவதே இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தமைக்கு அடிப்படையாக அமைந்தது.

## 2.8 கணக்காய்வின் நோக்கங்கள்

---------------------------------------------------

இச்செயலாற்றல் கணக்காய்வின் அடிப்படை நோக்கம் பிரதேச செயலகங்கள் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொது மக்களுக்கு செயற்திறனான மற்றும் வினைத்திறனான சேவையொன்று கிடைத்துள்ளதா என்பது தொடர்பாக மதிப்பீடு செய்வதாகும். அதற்குரியதாக பின்வரும் துறைகள் ஊடாக இக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

(அ) பிரஜைகள் சாசனத்தை செயற்படுத்துதல்

(ஆ) பிரதேச செயலகங்களில் மனிதவள முகாமைத்துவம்

(இ) பிரதேச செயலகங்களில் பௌதீக வளங்கள் முகாமைத்துவம்

(ஈ) பொது மக்கள் சேவைகள் நிறைவேற்றுதல்

## 2.9 கணக்காய்வு நியதிகள்

-----------------------------------------

கணக்காய்வு அணுகுமுறைக்காக கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டன.

(அ) 1962 இன் 58 ஆம் இலக்க அதிகாரமளிக்கும் (பிரதேச செயலாளர்கள்) சட்டம்

(ஆ) உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதேச நிர்வாகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள சுற்றறிக்கைகள்

(i) 1994 யூன் 08 ஆந் திகதிய HA/DA/8 ஆம் இலக்க 35 ஆம் இலக்கத்தின் அறிவுறுத்தலின் கீழான பிரதேச செயலகங்களில் தயாரிக்கப்படும் வருடாந்த நிர்வாக அறிக்கை

(ii) 1994 மே 04 ஆந் திகதிய HA/DA/2/4/93/94 ஆம் இலக்கமுடைய 34 அறிவுறுத்தலின் பிரகாரம் பிரதேச செயலகங்களில் பொது மக்கள் திகதி தொடர்பான சுற்றறிக்கை

(iii) 1994 திசெம்பர் 15 ஆந் திகதிய HA/DA/4/7 ஆம் இலக்க 37 ஆம் அறிவுறுத்தலின் பிரகாரம் பொது மக்களால் அனுப்பிவைக்கப்படும் கடிதங்களுக்கு பதில் வழங்குதல் தொடர்பான சுற்றறிக்கை நியதிகள்

(iv) 1995 யூலை 02 ஆந் திகதிய HA/DA/4/10 ஆம் இலக்கத்தின் 35 ஆம் இலக்க அறிவுறுத்தலின் கீழ் பிரதேச செயலகங்களில் மாதிரிப் படிவ தேவைப்பாடு தொடர்பான சுற்றறிக்கை

(v) 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் / சேவைநாடுனர் சாசனத்தை அறிமுகப்படுத்துவுதற்காக செயற்திறனான கூட்டிணைப்பு, வழிகாட்டல் வழங்கல் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு தொடர்பான சுற்றறிக்கை

(vi) 2012 செப்தம்பர் 11 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திறனான அரச சேவையொன்றுக்காக தொடர்புபடுவதற்கான சுற்றறிக்கை

(vii) 2013 நவம்பர் 05 ஆந் திகதிய பிரதேச நிர்வாக சுற்றறிக்கை/ அறிவுறுத்தல் - 2013/04 இன் பிரகாரம் வருமானம் மற்றும் பெறுமதி தொடர்பான சுற்றறிக்கை

(viii) 2015 யூன் 08 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகம் / பிரதேச செயலகங்களுக்கு சேவைகளுக்காக வருகை தரும் பொது மக்களுக்கு செயற்திறனான நட்புறவான சேவையொன்றை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை

(ix) பிரதேச செயலகங்களின் சேவை வழிகாட்டல் கோவை தொடர்பான கையேடு

(x) பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவையாளர் பொதுமக்கள் சேவைக்கான வழிகாட்டல் கோவை

## 2.10 கணக்காய்வு அணுகுமுறை

---------------------------------------------

(அ) கோவைகள் மற்றும் அறிக்கைகளை ஆய்வுசெய்தல்
(ஆ) அமுலிலுள்ள சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றை ஆய்வுசெய்தல்
(இ) நேர்முக கலந்துரையாடல்
(ஈ) சேவை வழிக்காட்டல் கோவைகளை ஆய்வு செய்தல்
(உ) வெளிக்கள பரிசோதனை
(ஊ) வினாக்கொத்துக்களை வழங்கி பதில் பெற்றுக்கொள்ளல

## 2.11 பிரதேச செயலகங்களில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது தொடர்புறும் ஏனைய நிறுவனங்கள்

---------------------------------------------------------------------------------------------------------

பிரதேச செயலகங்களில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஏனைய 40 அரச நிறுவனங்கள் அளவில் தொடர்புபடுவதுடன் அவற்றிற்கு இடையே நாளாந்த செயற்பாடுகளுக்காக நேரடியாக தொடர்புபடும் நிறுவனங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) <u>பதிவாளர் நாயகத் திணைக்களம்</u>

சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படும் விவாக, பிறப்பு, இறப்பு, மலைநாட்டு விவாக, விவாகரத்து மற்றும் முஸ்லிம் விவாகரத்து பிரதிகளை விநியோகித்தல் பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) <u>மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் (மாகாண சபை)</u>

பிரதேச செயலகத்தினால் அரச வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த பிரதேச செயலக பிரதேசத்திற்குரிய வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் இடம்பெறுகின்றது.

(இ) <u>ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்</u>

16 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு சட்டரீதியாக தேசிய அடையாள அட்டையை வழங்குவது தொடர்பாக உரிய விண்ணப்பங்களை ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்கு சாதராண தபாலில் அனுப்புதல் மற்றும் ஒரு நாள் சேவை

அடையாள அட்டை வழங்குதல் பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஈ) சமூக சேவைகள் திணைக்களம்

(உ) நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம்

(ஊ) ஓய்வூதிய திணைக்களம்

## 3 கணக்காய்வு அவதானிப்பு


## 3.1 பிரஜைகள் சாசனத்தின் பிரகாரம் செயற்படுதல்

### 3.1.1 பிரஜைகள் சாசனம் தொடர்பாக அறிவூட்டுதல்

**(அ)** இப்பிரஜைகள் சாசனத்தை முறையாக தயாரிக்கும் கட்டத்தின் போது வழிகாட்டி நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பிரதேச செயலகத்தினுள் சேவை வழங்கும் உத்தியோகத்தர்களும் அது தொடர்பாக அறிந்திராமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பிரஜைகள் சாசனத்தை அலுவலக வளவில் காட்சிப்படுத்தல்**

பிரஜைகள் சாசனத்தை அலுவலக வளவில் நன்றாக காட்சிப்படுத்தக்கூடிய இடமொன்றில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் செயலாறறல் கணக்காய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட மாதிரியில் உள்ளடக்கப்பட்ட எட்டு பிரதேச செயலகங்களில் 8 அதாவது கடுவெல, மொறட்டுவ, கெஸ்பவ மற்றும் ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஆகிய பிரதேச செயலக வளவில் பிரஜைகள் சாசனம் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 4 பிரதேச செயலகங்களான அதாவது கொழும்பு, கொலொன்னாவ, ஹோமகம, மற்றும் திம்பிரிகஸ்யாய ஆகிய பிரதேச செயலக வளவில் பிரஜைகள் சாசனம் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.




பிரஜைகள் சாசனம் - ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஆகிய பிரதேச செயலகம்

## (இ) பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்

-------------------------------------------------------

ஏதாவது சேவையொன்றை வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், செலவுகள், கட்டணங்கள் போன்றவை குறித்த அறிவித்தல் பலகைகள், கையேடுகள், விசாரணை நிலையங்கள் மற்றும் இணையத்தளங்கள் மூலமாக பொது மக்களுக்கு அறியத் தரப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சேவையை வழங்கும் நடைமுறைகள் குறித்து சேவையைப் பெற்றுக் கொள்ள வருகை தந்திருந்த பொது மக்களுக்கு அறியத் தரப்பட்டிருக்கவில்லை. இதனால் பொது மக்கள் ஓரோர் இடமாகப் போய் சிரமங்களுக்கு உள்ளாகும் விதத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறே தயாரிக்கப்பட்ட திட்ட வரைவு சாசனத்தின் பிரகாரம் பணிகள் தொடர்பாக 6 மாதங்களுக்கு ஒரு தடவையாவது ஒரு மறு ஆய்வுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் எனினும் அந் நடவடிக்கை செயற்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.1.2 பிரஜைகள் சாசனம் மேம்படுத்தல் கட்டம்

----------------------------------------------------------------------

#### (அ) பிரஜைகள் சாசனத்தை மேம்படுத்தும் கட்டம்

----------------------------------------------------------------------------

இதன் போது சுற்றறிக்கை மூலம் பிரஜைகள் சாசனத்தின் அடிப்படையில் பிரதேச செயலகங்களால் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகள் குறித்து விபரங்களை பிரசுரங்கள் அல்லது துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றாலும் பொது மக்கள் பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் குறித்து பொதுமக்கள் சரியாக அறிந்திருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது.

#### (ஆ) சேவைகளை நிலைப்படுத்தும் கட்டம்

--------------------------------------------------------------

பிரஜைகள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை அக்காலப்பகுதியில் மேற்கொள்ள முடியாமல் போகும் போது செய்யத் தவறியது நிறுவனத்தின் தன்மைக்கும் நம்பகத்தன்மையையும் மோசமான பாதிப்பினை ஏற்படுத்துவதால் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை தொடர்பாக நம்பிக்கையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நாளதுவரையாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து சேவைகளை நிலைப்படுத்த வேண்டிய போதும் அதற்கு இணங்க பிரதேச செயலகங்களில் நாளது வரையாக்கியிருக்கவில்லை. பொது மக்களுக்கு வினாக்கொத்தொன்றை சமர்ப்பித்து பெற்றுக்கொண்ட பொது மக்கள் பிரதிநிதி அடிப்படையில் அரச சேவை தொடர்பாடு பொது மக்களுக்கு இடையே உயர்மட்ட பாராட்டுக்கள் நன்மதிப்பொன்று இல்லையென அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 உரிய நேரத்திலான பிரஜைகள் சேவை சாசனம்

----------------------------------------------------------------------------

#### (அ) பிரஜைகள் சாசனத்தை செயற்படுத்துவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

பிரஜைகள் சாசனத்துக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்த, தொடர்ச்சியாகப் பின் தொடர்ந்து தேடிப் பார்த்தல் எனும் நடைமுறையைப் பின்பற்றுதல் அவசியமாகும். அதாவது பொது மக்கள் முறைப்பாடுகளைச் செய்யக் கூடிய நிலையங்களை அமைத்தல், அவற்றின் மூலம் கிடைக்கக் கூடிய சிறந்த மற்றும் வளமான கருத்துகள் குறித்து உரிய

உத்தியோகத்தர்களுக்கு அறியத் தரும் வழிமுறையைப் பயன்படுத்தல் மூலமாக பொது மக்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்க முடிவதோடு, சிறந்த கருத்துகள் மூலமாக செயற்குழுவின் ஆர்வத்தையும், திருப்தியையும் தொடர்ச்சியாகப் பேண முடியும். அதற்கிணங்க பின் தொடர்ந்து தேடிப் பார்க்கும் நடவடிக்கையை மேற்கொள்வது மிகவும் முக்கிய அங்கம் எனினும் முறைப்பாட்டு நிலையங்களை அமைத்தல் என்பது எந்தவொரு பிரதேச செயலகத்திலும் நடைபெற்றிருக்கவில்லை.

**(ஆ) பிரஜைகள் சாசனத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்தல்**

-------------------------------------------------------------------------------------------------------------------

செயற்படுத்தப்படுகின்ற சாசனத்தின் வெளிப்பாடுகள் மற்றும் சேவைகளின் தரங்களை மேலும் துல்லியமாக அடையக் கூடிய விதத்தில் சாசனத்தின் தரங்களை மேலும் மேம்படுத்தக் கூடிய வழிமுறைகள் இனங் காணப்படுவதை இங்கு எதிர்பார்த்த போதிலும் இந்த மேம்படுத்தல் செயற்பாடானது எந்தவொரு பிரதேச செயலகத்திலும் இடம்பெற்றிருக்கவில்லை.

**(இ) மாற்றப்படும் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பிரஜைகள் சாசனம் என்பது காலத்துக்குக் காலம் மாறக் கூடிய குறிக்கோளாகும். அதாவது பிரஜைகள் சாசனத்தை ஆரம்பித்து செயற்படுத்தும் போது ஆய்வுகள், பகுப்பாய்வுகள் போலவே திட்டமிடலும் இடையறாது செய்யப்படல் வேண்டும். பிரஜைகள் சாசனத்தைச் செயற்படுத்துவது குறித்து வெளியிடப்பட்டுள்ள நிர்வாக சுற்றறிக்கை விதிமுறைகளின் பிரகாரம் பிரஜைகள் சாசனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொது மக்கள் சேவைகள் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல், பின் தொடர்தல் நடவடிக்கைகள் ஆகியன 2008 ஆம் ஆண்டிலிருந்து போதியளவில் நடைபெற்றுள்ளதாக உறுதிப்படுத்தப் படவில்லை. அவ்வாறு நடைபெற்றிருப்பின் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் பொது மக்கள் சேவைகளை செயல்திறன் மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் அத்தோடு அரசாங்க சேவைகள் மீது பொது மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதமாக உயர்ந்த தரத்தோடு நிறைவேற்றவும் அது காரணமாகியிருக்கும்.

பிரஜைகள் சாசனத்தை நாளதுவரையாக நடாத்திச் செல்வதால் அரச சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கு முடியுமென குறிப்பிட்டு 2018 சனவரி 24 ஆந் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2018(I) விநியோகிக்கப்பட்டிருந்த போதும் அந்நடவடிக்கைகள் நாளது வரையாக்கப்பட்டு

புதிய வடிவமொன்றில் பராமரித்துச் செல்வதற்கு பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பிரஜைகள் சேவை சாசனத்தை நாளதுவரையாக்குதல்**

பிரஜைகளின் சாசனத்தை நடைமுறைப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க, காலப் போக்கில் அபிவிருத்தி அடையும் அரச துறை செயற்பாடுகளை செயற்திறன் மிக்கதாக்க ஆக்குவதற்கும், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் தேவையான திருத்தங்களுடன் பிரஜைகள் சாசனத்தில் திருத்தங்கள் செய்து செயற்படுத்தப்பட வேண்டும் என அறியத் தரப்பட்டுள்ளது. அவ்வாறே இலங்கை பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மேற்பார்வைக்கு உட்பட்ட நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதில் இந்த தேவை வலியுறுத்தப்படுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. என்ற போதிலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிரதேச செயலகக் காரியாலயத்தினால் அதைக் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.


## 3.2 அலுவலக வளவில் காணபப்ட வேண்டிய தேவைப்பாடுகள்

### 3.2.1 சேவை நியமங்களை முறையாக ஸ்தாபித்தல்

கொழும்பு மாவட்டத்தில் 13 பிரதேச செயலகங்களில் ஒன்றான கடுவெல பிரதேச செயலகம் மிகவும் செயற்திறனாகவும் நல்ல கவர்ச்சிகரமாகவும் காணப்படுவதாக குறிப்பிடலாம். அலுவலக வளாகத்தின் அமைப்பு கட்டமைப்பு ஒழுங்காக காணப்படுவதுடன் காணப்படும் இடவசதிகளில் ஒழுங்குமுறையாக அலுவலகம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு மிக உயர்ந்த தரமான மற்றும் செயற்திறனான சேவையை வழங்கும் வகையில் அலுவலக வளாகம் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

மாற்றுத்திறனாளிகளின் வருகையை எளிதாக்கும் வகையில் சமூக சேவைகள் பிரிவினை ஸ்தாபித்திருத்தல், வாகனங்களின் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் இடங்களில் வரிசைகள் வேறாக்கப்பட்டு நேர்த்தியாகவும் ஒழுங்கு முறையாகவும் பொது மக்களுக்கு மிக வசதியான வகையில் கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டிருத்தல், இருப்பதற்காக ஆசனங்கள் ஒதுக்கீடு செய்திருத்தல் ஊடாக சேவையை பெற்றுக்கொள்ள வருகை தரும் பொது மக்களுக்கு மிகவும் இலகுவாகவும்

விரைவாகவும் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. இதன் பிரகாரம் கடுவெல பிரதேச செயலகம் சிறந்த முகாமைத்துவத்துடனும் முறையான நடைமுறையொன்றுடனும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.



வாகனங்களின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் இடம் (கடுவெல பிரதேச செயலகம்)

### 3.2.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------------

பிரதேச செயலகங்களின் ஒட்டுமொத்த பதவியணியின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை என்பன ஒப்பிடப்படும் போது சிரேஷ்ட மட்டத்தில் 04 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 10 வெற்றிடங்களும் இரண்டாவது மட்டத்தில் 235 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 8 வெற்றிடங்களாக மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 257 ஆக காணப்பட்டன. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன,

| பிரதேச செயலகம் | சிரேஷ்ட மட்டம் | | | மூன்றாம் மட்டம் | | | இரண்டாம் மட்டம் | | | ஆரம்ப மட்டம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆங்கீகரி | உள்ளவாறு | வெற்றிடம் | ஆங்கீகரி | உள்ளவாறு | வெற்றிடம் | ஆங்கீகரி | உள்ளவாறு | வெற்றிடம் | ஆங்கீகரி | உள்ளவாறு | வெற்றிடம் | ஆங்கீகரி | உள்ளவாறு | வெற்றிடம் |
| கடுவெல | **4** | **4** | **-** | **3** | **3** | **-** | **151** | **132** | **19** | **9** | **8** | **1** | **167** | **147** | **20** |
| தெஹிவள | **4** | **4** | **-** | **4** | **2** | **2** | **76** | **68** | **8** | **8** | **9** | **-** | **92** | **83** | **10** |
| கெஸ்பவ | **4** | **4** | **-** | **2** | **2** | **-** | **197** | **189** | **8** | **9** | **8** | **1** | **212** | **203** | **9** |
| ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டே | **4** | **4** | **-** | **2** | **1** | **1** | **89** | **67** | **22** | **8** | **6** | **2** | **103** | **78** | **25** |
| கொழும்பு | **5** | **5** | **-** | **2** | **2** | **-** | **132** | **106** | **26** | **14** | **12** | **2** | **153** | **125** | **28** |
| பாதுக்க | **3** | **2** | **1** | **2** | **1** | **1** | **141** | **126** | **15** | **8** | **8** | **-** | **154** | **137** | **17** |
| ரத்மலான | **4** | **3** | **1** | **2** | **1** | **1** | **71** | **59** | **12** | **7** | **7** | **-** | **84** | **70** | **14** |
| கொலன்னாவ | **1** | **-** | **1** | **6** | **4** | **2** | **139** | **95** | **44** | **11** | **10** | **1** | **157** | **109** | **48** |
| மஹரகம | **4** | **4** | **-** | **2** | **2** | **-** | **136** | **128** | **8** | **8** | **7** | **1** | **150** | **141** | **9** |
| ஹோமாகம | **5** | **4** | **1** | **2** | **2** | **-** | **214** | **199** | **15** | **9** | **9** | **-** | **230** | **214** | **16** |
| மொறட்டுவ | **4** | **4** | **-** | **3** | **2** | **1** | **131** | **114** | **17** | **9** | **9** | **-** | **147** | **129** | **18** |
| திம்பிரிகஸ்யாய | **6** | **6** | **-** | **3** | **1** | **2** | **117** | **93** | **24** | **14** | **14** | **-** | **140** | **114** | **26** |
| சீத்தாவக்க | **4** | **4** | **-** | **2** | **2** | **-** | **190** | **172** | **18** | **9** | **9** | **-** | **205** | **187** | **17** |
| மொத்தம் | **52** | **48** | **4** | **35** | **25** | **10** | **1784** | **1548** | **236** | **123** | **116** | **8** | **1994** | **1737** | **257** |

பிரதேச செயலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்க போதுமான அதற்காக தகுதியான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல் வேண்டும். போதுமான பதவியணியினரை ஈடுபடுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு செயற்திறனான மற்றும் பயனுள்ள சேவையை வழங்க முடியும். இருப்பினும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகங்களுக்காக 1784 இரண்டாம் தர பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதி

மொத்த பதவியணியினரில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 236 ஆக காணப்பட்டது. அதாவது, அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் தர பதவியணியினருடன் ஒப்பிடும்போது வெற்றிடங்களின் விகிதம் 13.2 சதவீதமாகும். எனவே, பிரதேச செயலகங்களில் இரண்டாம் தர ஊழியர்கள் இல்லாமை காரணமாக, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவையை திறமையாகவும் திறமையாகவும் மேற்கொள்ள முடியாது என்பதைக் அவதானிக்க முடிந்தது.

### 3.2.3 பௌதீக வளங்கள் முகாமைத்துவம்

பிரஜைகள் சாசனத்தை நிறுவன மயப்படுத்தும் போதும் சேவை தரங்களை தீர்மானிக்கும் போதும் நிறுவனத்தின் இயலுமை அதாவது பௌதீக வளங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய போதும், சாசனத்தை செயற்படுத்தும் நிறுவனத்திற்கு சொந்தமான இயலுமை தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2.3.1 பதவியணியினருக்காக காணப்படும் பௌதீக வளங்கள்

#### (அ) ஹோமாகம பிரதேச செயலகத்தில் காணப்படும் பௌதீக வளங்கள்

தற்போது நகரமயமாக்கல் செயல்முறைக்கு உட்பட்டுவரும் மொத்த சனத்தொகை 246,405 ஆகவும், 81 கிராமசேவையாளர் பிரிவுகளுடனும் 11,816 ஹெக்டேயர் அளவிலான ஹோமாகம பிரதேச செயலகத்தில் பிரஜைகள் சாசனத்தை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு போதுமான பௌதீக வசதிகள் உத்தியோகத்தர்களுக்கு இல்லாமல் இருந்ததுடன் அதன் சேவை பெறும் பொதுமக்களுக்கு சிக்கல்கள் ஏற்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) ஹோமாகம பிரதேச செயலகத்தில் காணப்படும் பதிவறை வளங்கள்

ஓய்வூதிய இலக்கம், பிறப்பு, மரணம் மற்றும் விவாக சான்றிதழ் வழங்கும் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளின் பதிவறைகளில், அவசர தீ விபத்து மற்றும் ஆவணங்கள் காணாமல் போதல் என்பவற்றை தவிர்ப்பதற்காக CCTV முறைமையொன்றும் தீயணைக்கும் உபகரணங்கள் போன்ற கட்டுப்பாட்டு முறைமைகளை செயற்படுத்தி பொது மக்களின் தகவல்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.



ஹோமாகம பிரதேச செயலகத்தின் பதிவேடுகள் அறை

**(இ) கொலன்னாவ பிரதேச செயலகத்தில் காணப்படும் பௌதீக வளங்கள்**

---

(i) கொலன்னாவ பிரதேச செயலகத்தில் ஆண்டுக் குத்தகை மற்றும் நீண்டகாலக் குத்தகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் காணி உரித்து உத்தியோகத்தர்களுக்கு திட்டவரைபடத்தையோ பிரித்துக் பார்த்துக்கொள்வதற்கு போதியளவு மேசையொன்று இல்லாமல் இருந்ததுடன் சிரமத்துடன் அங்கு நடவடிக்கை எடுப்பது அவதானிக்கப்பட்டது.

(ii) முதியோர் படிகள், வலது குறைந்தோர் கொடுப்பனவுகள், மருத்துவசார் படிகள் என்பவற்றைப் சேவை நாடுனர்களின் மனநல ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு சமூக சேவை உத்தியோகத்தருக்கு முடியுமாக இருந்த போதும் சேவை நாடுனர்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்கும் அத்தகவல்களின் தனிப்பட்ட மற்றும் இரகசியத்தன்மையை பாதுகாக்கும் வகையில் செயற்படுதற்கு பொருத்தமான வேலைச்சூழல் ஒன்று சமூக சேவை உத்தியோகத்தருக்கு காணப்படவில்லை. அதனால் நிதிசார் நலன்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் அதற்கு மேலாக அவர்களின் மன ஆரோக்கியத்திற்காக ஆலோசனை வழங்குவதற்கு முடியாதுள்ளது. அவ்வாறே முதியோர் சமூக சேவை உத்தியோகத்தரை சந்திப்பதற்கு

வரும் போது அவர்களுக்கு இருப்பதற்கு கூட இடவசதிகள் இருக்கவில்லை.

**(ஈ) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்**

---

பிரதேச செயலக வளவில் போதியளவு இடவசதிகள் காணப்படாமை கடமைகளை மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர்கள் முகங்கொடுக்கும் பிரதான சிக்கலொன்றாக இருந்தது.

**3.2.3.2 பொது மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்கள்**

---

பொது மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்கள் தொடர்பாக பரீட்சிக்கும் போது பிரதேச செயலகங்களில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) கொலன்னாவ பிரதேச செயலகம்**

---

1990 ஆம் ஆண்டு முதல் அதிக மக்கள் குடியிருப்பிற்குட்பட்டுள்ள கொலன்னாவ பிரதேச செயலகத்தின் மொத்த சனத்தொகை 223,042 ஆகவும், 46 கிராமசேவையாளர் பிரிவுகளுடனும் 27.3 சதுர கிலோ மீற்றர் நிலப்பகுதியைக் கொண்டது. இவ்வாறான நிலைமையில் பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக பிரதேச செயலகத்தில் இடவசதிகள் போதுமாக இல்லையெனவும் அதனூடாக பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உட்படுவதாக அவதானிக்கப்பட்டது. போதுமான இட வசதிகளை செய்துகொடுப்பதற்காக இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகம்**

---

இலங்கையின் பிரதான நிர்வாக தலைநகரிற்கு உரித்தாகும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலக பிரிவின் மொத்த சனத்தொகை 116,295 ஆகவும், 20 கிராமசேவையாளர் பிரிவுகளையும் 16.74 சதுர கிலோ மீற்றர் நிலப்பகுதியைக் கொண்டது. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகத்திற்கு செல்லும் முன்பக்க பிரதான நுழைவாயில் இடையூறு ஏற்படும் வகையில் பிரதேச செயலகத்திற்கு உரிய உத்தியோகபூர்வ வாகனம் நிறுத்தப்பட்டுள்ளதால் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வருகின்ற வலது குறைந்த நபர்களுக்கு கூட அலுவலகத்திற்கு செல்வதற்கு சிக்கலான நிலைமையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.



பிரதான நுழைவாயில் இடையூறு ஏற்படும் வகையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ள முறை

## 3.3 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

---

### 3.3.1 பிறப்பு, விவாக, மரணச் சான்றிதழ்களின் நகல் பிரதிகளை வழங்குதல்

---

சட்டபூர்வமாக சான்றளிக்கப்பட்ட திருமணங்கள், பிறப்புகள், இறப்புகள், கண்டிய திருமணங்கள் விவாகரத்து மற்றும் முஸ்லிம் விவாகரத்துகளின் நகல் பிரதிகளை வழங்கும் நோக்கத்திற்காக பிரதேச செயலகத்தால் பதிவாளர் பிரிவு செயற்படுத்தப்படுகிறது. பிறப்புகள், திருமணங்கள், மரணச் சான்றிதழ் நகல் பிரதிகளை வழங்கும் போது பிரதேச செயலகத்தினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பிரதேச செயலக வழிகாட்டல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சேவைகளை நிறைவேற்றும் போது பதிவாளர் நாயகத் திணைக்களம், பிரதேச செயலகத்துடன் இணைந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான வசதிகள் பிரதேச செயலகத்தாலோ, உரிய திணைக்களத்தாலோ வழங்கப்படாத காரணத்தால் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கும் விதம் அவதானிக்கப்பட்டதோடு அதன் விபரங்கள் பின்வருமாறு.

**பதிவாளர் பிரிவுகளில் காணப்படும் பௌதீக வசதிகள்**

---

(i) ஹோமாகம பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவானது மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் செயற்படுத்தப்படுவதோடு அந்த அலுவலகத்தின் பதிவாளர் பிரிவு ஆனது, பழைய வீடொன்றுக்குள் தமது கடமைகளை மேற்கொள்ளத் தேவையான வெளிச்சமோ, காற்றோட்டமோ இன்றிக் காணப்பட்டதோடு, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவு ஆனது, மிகவும் குறுகிய இடத்தில், தேவையான அலுவலக உபகரணங்கள் கூட போதியளவில் இல்லாத நிலையில் குறைந்த வசதிகளுடன் செயற்படுத்தப்படுவதுவும் அவதானிக்கப்பட்டது.




ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவு




ஹோமாகம பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவு

(ii) பிறப்புச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களை வழங்கும் போது பெற்றுக்கொள்ளும் பணத்தை பாதுகாப்பாக வைக்கக்கூடிய காப்பறைகள் இல்லாமை மற்றும் சேவைகளை மேற்கொள்ளும் போது தேவையான பௌதீக வசதிகள் (கணனி போன்ற) போதியளவில் இல்லாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.3.2 வருமான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்**

-----------------------------------------------------------------------------------------

பிரதேச செயலகங்களால் அரச வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உரிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பததிரங்களை வழங்குகின்றன. வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகம் தொடர்புடைய தரப்பினராக இனங்காணலாம். வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பததிரங்களை வழங்கும் போது பிரதேச செயலகங்களால் பின்பற்றப்பட வேண்டியெ சயற்பாடுகள் பிரதேச செயலக வழிகாட்டல் கோவையில் காட்டப்பட்டுள்ளது.

**(அ) வருமான அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் பிரிவில் காணப்படும் பௌதீக வசதிகள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகத்தின் கீழ் மாடியின் முன் பகுதியில் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பிரிவு அமைந்துள்ளது. பிரதான பாதைக்கு அருகாமையில் இந்தப் பிரிவு அமைந்திருப்பதால் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வரும் பொது

மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வரையில் காத்திருக்க போதியளவு இட வசதிகள் இல்லாமையால் பல வித சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. அவ்வாறே காபன் வரியை அறவிட கூண்டொன்று அமைக்கப்பட்டிருப்பதுவும், வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் குறுகிய இடத்தினுள்ளேதான். அதனால் பணிகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களைப் போலவே இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ள வரும் பொது மக்களும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.



வருமான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் காபன் வரி அறவிடும் இடத்தின் முன்பக்கம்

(ii) ஹோமாகம பிரதேச செயலகத்தின் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் காபன் வரி கொடுப்பனவு என்பவற்றிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கவுன்டர்களின் கண்ணாடியானது, பொது மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர் ஆகியோருக்கு இடையே தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் மிகவும் சிரமமாக சிறிய கவுன்டர் ஊடாக கதைப்பதற்கு முடியுமான வகையில் தயாரிக்கப்பட்டிருந்தமையால் பொது மக்களுக்கு சுதந்திரமாக தமது கருத்துக்களை கூற முடியாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.



**(ஆ) பொதுமக்கள் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல்**

செயலாற்றல் கணக்காய்வின் தெரிவிற்குரிய 8 பிரதேச செயலகங்களின் கணக்காய்வின் போது அந்த அலுவலகங்களின் மூலம் பொது மக்கள் சேவைகளை வழங்கும் போது பொது மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பொது மக்களின் கருத்துக்களை கோரும் போது ஹோமாகம பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) வரிசையில் தரித்திருக்கும் சேவை நாடுனர்களுக்கு சேவை கவுன்டர்களுக்கு செல்வதற்கு முறையான நடைமுறையொன்று காணப்படாமை.

(ii) சேவை வழங்கும் அரச உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு சேவைகள் வழங்கும் போது ஒழுங்காக கதைக்காமை மற்றும் அறிவூட்டல்களை வழங்காமை.

(iii) பொது மக்கள் மாற்றக்கூடிய காசு இல்லாமல் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தல்.

**3.3.3 சமூக சேவைகள்**

சமூக சேவைகள் திணைக்களத்தால் பிரதேச செயலகத்தில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களை அனைத்து பிரதேச செயலகங்களிலும் காணக் கிடைக்கிறது. பிரதேச செயலகத்தில் இருக்கும் சமூக சேவைகள் பிரிவினால் மேல் மாகாண நிதிகள் மற்றும் பரவலாக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி கல்வி உதவித் தொகைகள், நோய்

உதவித் தொகைகள், முதியோர் உதவித் தொகைகள், மக்கள் உதவித் தொகைகள் மற்றும் அங்கவீனர் உதவித் தொகைகளை வழங்குவது நடைபெற்று வருகிறது. கொலன்னாவ, கெஸ்பேவ, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மற்றும் கடுவலை ஆகிய பிரதேச செயலகங்களுக்குள் இந்தப் பிரிவானது மிகுந்த அர்ப்பணிப்போடு பணியாற்றுவது அவதானிக்கப்பட்டதோடு, திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்துக்குள் இந்தப் பணிகளை நிறைவேற்றுவது என்பது மேற்கூறப்பட்ட பிரதேச செயலகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

எடுத்துக் காட்டாக கொலன்னாவ பிரதேச செயலகத்தின் பெண் சமூக சேவை உத்தியோகத்தரால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(அ) அரசாங்கத்தால் சமூக சேவை நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் பணம் போதியளவில் இல்லை என்பதால் இந்த பெண் சமூக சேவை உத்தியோகத்தரின் தலையீட்டால் ஓய்வு பெற்ற கொடையாளிகளினதும் வேறு வளவாளர்களினதும் ஒத்துழைப்போடு, கல்வியைப் பெறும் பிள்ளைகளின் தேவைகளை தொடர்ந்தும் பூர்த்தி செய்யவும், அவ்வாறே அங்கவீனர்களுக்கு உதவி செய்யத் தேவையான பின்னணிகளை வழங்கி அந்த நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாக கூட்டிணைத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது பாடசாலைக்கு செல்லாத, அங்கவீனர் உதவித் தொகையைப் பெறும் மெதுவாக மூளை வளர்ச்சியடையும் மற்றும் மன வளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்காக கிழமைக்கு 2 தினங்கள் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, சுயேச்சையாக சேவையாற்றும் ஆசிரியை ஒருவரை இணைத்துக் கொண்டு அந்த நடவடிக்கையானது அப் பிரதேசத்திலுள்ள விகாரையை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. இந்த அங்கவீனப் பிள்ளைகளுக்கு தமது அன்றாட நடவடிக்கைகளை தாமாகவே மேற்கொள்ளக் கூடிய விதத்தில் அவர்களைப் பயிற்றுவிக்க, கிழமைக்கு 5 நாட்களும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த ஒரு பொருத்தமான இடம் இல்லாத காரணத்தால் 2 நாட்கள் மாத்திரம் அப் பிரதேசத்திலுள்ள விகாரையில் அந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.3.4 சிறுவர் உரிமை மேம்பாடு

-----------------------------------------

#### (அ) நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள்

---------------------------------------------------------------------------------------------------------------------------

தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க கைவிடப்பட்ட, அநாதரவான, நிர்க்கதியான பிள்ளைகளும் சட்டப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் பிள்ளைகளையும் விசேடமாக கொண்டு சகல பிள்ளைகளினதும் உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்களுக்கு சம சந்தர்ப்பங்களை வழங்கும் நோக்கில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களால் பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள சிறுவர்களின் எண்ணங்களை மேம்படுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களைத் துன்புறுத்துதல் என்பவற்றை குறைத்தல் பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை பாடசாலைக் கல்விக்கு தொடர்புபடுத்துதல் மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

#### (ஆ) பாடசாலை செல்லாத பிள்ளைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை

-----------------------------------------------------------------------------------------------------------

(i) பிரதேச செயலகம் மூலமாக, குறைந்த வருமானமுடைய, பாடசாலை செல்லாத பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாடசாலை உபகரணங்களையும், ஏனைய தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுத்த போதிலும், பிள்ளைகளைத் தொடர்ச்சியாக பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோர் எவ்வித ஈடுபாட்டையும் காட்டாத காரணத்தினால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இந்தப் பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் சமூக விழுமியங்களைப் பற்றிய எவ்வித விழிப்புணர்வும் இல்லை என்பதோடு, அவர்களுக்கு விழிப்புணர்வினை ஊட்டுவதற்கு அவர்களை ஒன்றிணைப்பது கூட ஒரு பாரிய சிக்கலாக உருவெடுத்துள்ளது. அவ்வாறே இந்தப் பிள்ளைகள் செல்லும் பாடசாலைகளிலும் போதைப் பொருள் ஆபத்து காணப்படுவதோடு அதன் மீது பிள்ளைகள் ஈர்க்கப்படத் தேவையான ஆதரவும் சமூகத்திலேயே உருவாகியுள்ளது. இதற்காக பிரதேச செயலகம் மாத்திரமல்லாது பொலிஸ் மற்றும் ஏனைய திணைக்களங்களையும் இணைத்துக் கொண்டு

வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பிள்ளைகள் வளரும் சூழலானது மிகவும் பாதுகாப்பற்றதாகக் காணப்பட்டதோடு பெண் பிள்ளைகளைப் போலவே ஆண் பிள்ளைகளும் சமூக துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) மொறட்டுவை பிரதேச செயலகத்தின் ஆலோசனை உத்தியோகத்தர்களால் பாடசாலைகள் மற்றும் பிள்ளைகள் சமூகம் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்திய போதும் அதைக் குறித்து அறிந்து கொள்ள பிள்ளைகளின் தேவை மிக சொற்பமாகவே காணப்பட்டதோடு பெற்றோரும் கூட பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக அறிந்து கொள்ள அந்தளவு ஆர்வம் காட்டவில்லை. இந்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் பெரும்பாலும் தந்தை போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவராக இருப்பதோடு பிள்ளைகளைப் பராமரிப்பது தாயின் சிறிய சுய தொழில்கள் மூலமாகக் கிடைக்கும் பணத்தினாலேயே நடைபெற்று வருகிறது.

(iii) இவ்வாறு காணப்படும் சமூக சூழலில் பிள்ளைகள் குறைந்த வயதில் திருமண பந்தத்தில் இணைதல் அதாவது இலங்கையில் காணப்படும் சட்டத்துக்குப் புறம்பாக 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் திருமண பந்தத்தில் இணைதல் என்பது ஏராளமாக நடைபெற்று வருவதோடு அவர்களால் இந்த பூமிக்கு வழங்கும் புதிய தலைமுறையினரும் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் இந்த உலகில் பிறக்கின்றனர். அதாவது தாயினதும், தந்தையினதும் வயது சட்டபூர்வமாகத் திருமணம் முடிக்கும் வயதான 18 வயதினை விடவும் குறைவாக இருப்பதன் காரணத்தால், அவர்களுக்கு விவாகச் சான்றிதழொன்று இல்லாமல் இருப்பதுடன் புதிதாகப் பிறக்கும் குழந்தைக்கு பிறப்புச் சான்றிதழொன்றும் இருக்காது. அதனால் பாடசாலைக்குச் செல்லும் வயதாகும் போது பிறப்புச் சான்றிதழ் இல்லாமை, அனுமான வயதுக்கான சான்றிதழைப் பெற்றிருக்காமை, அவ்வாறே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப பெற்றோருக்கு ஈடுபாடு இல்லாமை போன்றவற்றின் காரணமாக அந்தப் பிள்ளைகள் இந்த சமூகத்தில் காணப்படும் மோசமான சமூக சீரழிவு வட்டத்துக்கு இரையாகி விடுகின்றனர்.

(iv) இது இந்தப் பிரதேசத்தில் காணப்படும் பிரதானமான சமூகச் சிக்கல் என்பதோடு இது மேலும் மேலும் தீவிரமடைந்து வருவதால் இதை நல்ல நிலைமைக்கு திருப்ப அரச தலையீட்டின் அவசியம் தெளிவாக உணரப்படுவதோடு, போதைப் பொருள் வியாபாரிகளுக்கு தகுந்த தண்டனையை வழங்குவதில் தொடங்கி சமூக சீர்திருத்தத்தின் அவசியம் காணப்படுகிறது. சமூக விழிப்புணர்வை வழங்குதல் தொடர்பாக பிள்ளைகளுக்காகக் காண்பிக்கப்பட்ட ஓவியக் கண்காட்சியொன்றில் பிள்ளைகள் வரைந்திருந்த ஓவியமொன்றில் இவ்வாறு சமூகத்துக்கு தகவலொன்று வழங்கப்பட்டிருந்தது.




ஓவியக் கண்காட்சியின் போது பிள்ளையொருவரால் வரையப்பட்டிருந்த ஓவியம்

இந்த சமூக சூழலில் கூடுதலாக இள வயதில் திருமணமாவதால் உருவாகும் சிக்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- கல்விச் செயற்பாடுகள் சீர்குழைதல்
- பொருளாதார பிரச்சினைகள்
- அழகான சிறுவர் பராய இழப்பு
- தம்பதிகளுக்கு இடையில் சண்டை
- சிறுவர் மரணங்கள்
- மன அழுத்தம்
- விவாக வாழ்க்கை வெற்றியளிக்காமை

அவ்வாறே ஆலோசணை சேவைகள் மூலம் போதைப் பொருளுக்கு அடிமையான பிள்ளைகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல், அவ்வாறானவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மேற்கொள்வதுடன் அரசின் மூலம் வழங்கப்படும் இவ்வாறான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு கூட முன்வராமல் இருப்பதுடன் முன்னுக்கு கொண்டு வருவதும் சிரமமான செயற்பாடொன்றாக மாறியிருந்தது.

## (இ) சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரியான சேவைகள்

---

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலக பிரிவின் மேமா/ஜய/சிரிபரகும்பா வித்தியாலயத்தில் மிகக் குறைந்த கல்வியறிவினை கொண்ட சுமார் 25 பிள்ளைகளைக் கொண்ட குழுவுக்கு எந்தவொரு அரச அனுசரணையும் இல்லாமல் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தரால் வளவாளர்களின் சேவைகளைப் பெற்று 2018 ஆம் ஆண்டில் மேலதிக வகுப்புகள் நடாத்தப்பட்டிருந்தன. அதன் மூலம் பிள்ளைகளின் கல்வியறிவு முன்னேற்றம் அடைந்துள்ளதாக உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது. தமது கடமையை மிகைத்து மிகவும் அர்ப்பணிப்புடனும் அக்கரையுடனும் இப் பிரதேச செயலகத்தில் சேவை புரியும் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் சிறுவர் தலைமுறைக்காக செய்யப்படும் சேவை பாராட்டக்கூடிய சேவையொன்றாக இருப்பதுடன் ஏனைய பிரதேச செயலகங்களில் அவ்வாறான நிலைமையொன்று அவதானிக்கப்படவில்லை.



சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தரால் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

### 3.3.5 முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி

---

கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் சுமார் 94 முன்பள்ளி பிள்ளை பருவ மேம்பாட்டு நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுவதுடன் அக் குழந்தைகளுக்கு போதுமான பாதுகாப்பையும் பராமரிப்பையும் வழங்குவதிலும், முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பான தகுதியான ஆசிரியர்களைக் கொண்டிருத்தல் போன்ற சிக்கல்கள் உள்ளன. இந்த நிலையங்கள் தொடர்பான சிக்கல்கள் பின்வருமாறு.

(அ) முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களில் போதியளவு வசதிகள் காணப்படாமை.

(ஆ) சிறுவர்களுக்கு விளையாடுவதற்கு பாதுகாப்பான உபகரணங்கள் மற்றும் போதியளவு இடவசதிகள் காணப்படாமை.

(இ) முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களிலுள்ள ஆசிரியர்களில் பெரும்பாலானோர் தகைமைகளை பூர்த்தி செய்திராமை.

(ஈ) முன்பள்ளி பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களில் எழுத்துக்களை எழுதுவதற்கு மாத்திரம் அக்கரை செலுத்துதல்.

(உ) சிறுவர்களுக்காக போதியளவு வசதிகள் காணப்படாமை

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பிரதேச செயலகம் மூலம் பல்வேறு நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட்டாலும், இந் நிகழ்ச்சிகளில் பங்கேற்றதன் பின்னர் இவற்றின் மூலம் பெறப்பட்ட அறிவையும், அனுபவத்தையும் சமூகத்தில் நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. பிள்ளைகளைத் தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியில் ஈடுபடுத்த பெற்றோருக்கு இருக்க வேண்டிய ஆர்வம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுவதோடு குடும்பத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பாடசாலைக் கல்வியைப் பெற வேண்டிய வயதிலுள்ள சிறுபிராயப் பிள்ளைகள், ஒரு ஒழுங்கான சமூகம் ஏற்றுக் கொள்ளாத பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபடுவது அல்லது ஈடுபடுத்தப்படுவது அவதானிக்கப்பட்டதோடு இது பாரிய சமூகச் சீரழிவாக இப் பிரதேசங்களில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதாவது பிள்ளைகள் போதைப் பொருளைக் கடத்திச் செல்லும் இடைத் தரகர்களாகப் பயன்படுத்தப்படுவதோடு பெற்றோர் இதன் மூலமாக பொருளாதார பயன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். அத்தோடு பிள்ளைகள் பெருமளவில் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பதைக் காணக் கூடியதாக இருப்பதோடு அதைத் தடுக்க பெற்றோர்களினதோ, வயது வந்தோர்களினதோ எவ்விதக் கவனமும் செலுத்தப்படாததோடு, அதற்காக பிரதேச செயலகத்தினால் ஆலோசனை சேவைகள்

நடைபெற்ற போதிலும் அவற்றின் வெற்றி மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

அவ்வாறே சிறுவர் பாதுகாப்பு மற்றும் குழந்தைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக வருடாந்தம் கிடைக்கப் பெறும் நிதி ஒதுக்கீடு போதுமான அளவில் இல்லாமை, அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் உத்தியோகத்தர்களுக்கு போதிய தொழில்நுட்ப உபகரணங்கள் (கணனிகள், நிழற்படபிரதி இயந்திரங்கள்) இல்லாமை போன்ற குறைந்த வசதிகள் காரணமாக இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமானதாக ஆக்குவது என்பது சற்று சிரமமாகவே உள்ளது.

### 3.3.6 போதைப்பொருள் பேரழிவினை கட்டுப்படுத்தல்

---

**(அ) பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகள் மற்றும் போதைப் பொருள் வியாபித்துள்ள பிரிவுகள்**

---

கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்குரிய போதைப்பொருளுக்கு அடிமையான மற்றும் பாடசாலைகளுக்குச் செல்லாத பிள்ளைகள் தொடர்பாக நிர்வாக கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் போதைப் பொருள் வியாபித்துள்ள 489 கிராம சேவை பிரிவுகளும் பாடசாலைகளுக்கு செல்லாத 529 பிள்ளைகளும் இருந்தமை அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| பிரதேச செயலகம் | கிராமசேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை | போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள பிரிவுகள் | பாடசாலைகளுக்கு செல்லாத பிள்ளைகள் (அண்ணளவாக) |
|---|---|---|---|
| கொழும்பு | 35 | 35 | 210 |
| திம்பிரிகஸ்யாய | 20 | 15 | 23 |
| கொலன்னாவ | 46 | 44 | 54 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 20 | 13 | இல்லை |
| கடுவெல | 57 | 57 | 25 |
| மஹரகம | 41 | 27 | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| ஹோமாகம | 81 | 71 | 02 |
| பாதுக்க | 46 | 43 | 05 |
| கெஸ்பவ | 73 | 71 | 11 |
| மொறட்டுவ | 42 | 23 | 95 |
| இரத்மலான | 13 | 12 | 55 |
| தெஹிவள | 15 | 12 | இல்லை |
| சீதாவக்க | 68 | 66 | 49 |
| | ----- | ----- | ----- |
| மொத்தம் | 557 | 489 | 529 |

கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேசங்களுக்குரிய மொத்த கிராமசேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 557 ஆக இருந்ததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 489 கிராமசேவையாளர் பிரிவுகளில் அதாவது 88 சதவீதம் போதைப்பொருள் பாவனை வியாபித்திருந்தது. இந்நிலைமை மீது மொத்த சமூகமும் பாரிய சர்ச்சைக்குரிய நிலைமையில் உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் பாடசாலை செல்லாத பிள்ளைகள் மற்றும் போதைப்பொருள் பரவல்**

---

கொழும்பு பிரதேச செயலகப் பிரிவின் 35 கிராம சேவையாளர் பிரிவுகளில் போதைப் பொருள் பாவனை வியாபத்திருப்பதோடு இந்தப் பிரதேசங்களுக்குள் பாடசாலை செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை அண்ணளவாக 210 அளவில் இருந்தன. இந்தப் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு பிரதேச செயலகம் தேவையான பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் போன்ற அத்தியவசியப் பொருட்களை வழங்கிய போதிலும், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு பெற்றோர் காட்டும் எதிர்மறையான அணுகுமுறைகள், தாய்மார் வெளிநாடுகளுக்குப் போயிருத்தல், வேறு பாதுகாவலர்களிடம் பிள்ளைகள் தங்கியிருத்தல் மற்றும் பிள்ளைகளின் கல்வி குறித்து அவர்கள் காண்பிக்கும் உதாசீனம், தாய் / தந்தை சிறையிலிருத்தல், பல்வேறு காரணங்களுக்காக பாடசாலைகளில் இடைநிறுத்தப்பட்டிருந்த பிள்ளைகளை மீண்டும் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளும்போது அதிபர்கள் அந்தப் பிள்ளைகளை தமது பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளக் காட்டும் விருப்பமின்மை, பிள்ளைகள் பல்வேறு குற்றச் செயல்களுக்கு அடிமையாகி பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டிருப்பதால் அவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் காண்பிக்கும்

விருபபமின்மை (போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் வியாபாரம், போதைப் பொருள் விற்பனையில் இடைத் தரகர்களாக செயற்படுதல், புறாக்கள் போன்ற பிராணிகளை வளர்த்து விற்பனை செய்தல்), தந்தை போதைப் பொருளுக்கு அடிமையானவராக இருத்தல் மற்றும் பல்வேறு காரணங்களினால் குடும்ப அமைப்பு சீர் குலைந்திருத்தல் போன்ற காரணங்களால் இந்தப் பிள்ளைகள் தொடர்ச்சியாக பாடசாலைக்குச் செல்வதை நடைமுறைப்படுத்த இயலாதிருப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3.7 பிரதேச நிர்வாகத்திற்காக காணப்படும் குறைபாடுகள்

பிரதேச நிர்வாகம் தொடர்பாக பொது மக்களுக்கு நேரடி தொடர்புபடும் கிராமசேவை உத்தியோகத்தர்கள் பொதுமக்களுடன் நேடியாக தொடர்புபடும் கிராம சேவைகளுக்கு சேவை புரிவதற்கு போதியளவு வசதிகள் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக காணப்படும் சிக்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**(அ) கிராம சேவையாளர் மட்டத்திற்குரிய கிராமசேவையாளர் அலுவலகமொன்று இல்லாமை**

13 பிரதேச செயலகங்களுக்கு உரிய அலுவலக செயற்பாடுகளை முறையாக பேணிச் செல்வதற்கு பொருத்தமான இடமொன்று இல்லாமை தொடர்பான தகவல்களின் பிரகாரம் அலுவலக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான அலுவலகங்கள் இல்லாத 248 பிரிவுகள் காணப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **பிரதேச செயலகம்** | **கிராமசேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை** | அலுவலக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான அலுவலகங்கள் இல்லாத 248 பிரிவுகள் |
|---|---|---|
| கொழும்பு | 35 | 24 |
| திம்பிரிகஸ்யாய | 20 | 19 |
| கொலன்னாவ | 46 | 36 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 20 | 11 |

| | | |
|---|---|---|
| கடுவெல | 57 | 17 |
| மஹரகம | 41 | 23 |
| ஹோமாகம | 81 | 07 |
| பாதுக்க | 46 | 22 |
| கெஸ்பவ | 73 | 55 |
| மொறட்டுவ | 42 | 21 |
| இரத்மலான | 13 | - |
| தெஹிவள | 15 | 04 |
| சீதாவக்க | 68 | 09 |
| | ----- | ----- |
| மொத்தம் | 557 | 248 |

கிராம சேவையாளர் அலுவலக செயற்பாடுகளை தனிப்பட்ட வீடுகளின் அறைகள், சனசமூக மண்டபத்தின் ஒரு பகுதியில், கிராமத்தின் விஹாரையின் தர்ம மண்டபம், தனியாரின் கடைகள் போன்ற இடங்களில் மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய தற்காலிக இடங்களை உரிய உரிமையாளர்களின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு தேவைப்படும் போது கிராம சேவையாளர்களுக்கு தமது ஆவணங்கள், உபகரணங்கள் என்பவற்றை எடுத்துக்கொண்டு ஆங்காங்கே செல்வதற்கு நேர்ந்துள்ளது. இவ்வாறு நிகழ்வதால் கிராம சேவையாளர்களுக்கு தமது அலுவலக செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கு முடியாமல் இருப்பதுடன் பொது மக்களும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கிராம சேவையாளர்களால் கிராம மட்டத்தில் ஒரு ஒழுங்கான தகவல் முறைமையொன்றை பேணிச்செல்லல்**

---

கிராம சேவையாளர் வழிகாட்டல் கையேட்டின் பிரகாரம் கிராம சேவையாளர்களால் பேணப்பட வேண்டிய அரச காணிகள் தொடர்பான ஆவணங்கள், ஓய்வு பெற்றோர் பற்றிய விபரங்கள், சமுர்த்தி பெறுனர்கள், முதியோர் உதவித் தொகை, வாழ்வாதாரத் தொகை, நோய் உதவித் தொகை பெறுபவர்கள் பற்றிய விபரங்கள், அங்கவீனர்கள் தொடர்பான விபரங்கள் போன்றவற்றை கிராம மட்டத்தில் சமூக நல நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காக உரிய தகவல் அமைப்பொன்றைப் பேணத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட்டு சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறையொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இதனால் பொது மக்கள் நலனுக்காக அரசாங்க மட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை பயனுள்ள விதத்திலும், தாமதமின்றியும் செயற்படுத்துவதில் பலவீனமான நிலைமையே காணப்பட்டது.

**(இ) கிராம சேவையாளர்களிடையே காணப்படும் தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப வசதிகள்**

---

அவ்வாறே ஒழுங்கான அலுவலக வசதி இல்லாத காரணத்தால் தொலைபேசி, தொலைநகல் போன்ற வசதிகளைப் பெற்றுக் கொள்ளவும் இயலாதிருப்பதோடு கிராம சேவையாளர்களிடமிருந்து பொது மக்களுக்கு ஏதேனும் பணிகள் குறித்து அறிந்து கொள்ளக் கூட உரிய தினம் வரும் வரை காத்திருக்க நேர்கிறது. இணைய தொடர்பாடலுடன் நவீன தொழில்நுட்பமானது உயர்ந்த மட்டத்தில் காணப்படும் இக் காலகட்டத்தில் பிரதேச நிர்வாகப் பிரிவில் தொடர்பாடல் என்பது இந்தளவு கீழ்மட்ட நிலையில் காணப்படுவது, ஒரு நாடு எனும் வகையில் நாம் முகம் கொடுத்துள்ள பாரிய சிக்கலாகும். அதனால் இந்த நிலைமையை மாற்றி தொடர்பாடல் வழி முறைகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை இந்த அலுவலகத்துக்கு வழங்குவதோடு, அந்த வசதிகளை வழங்க முன்பு கிராம சேவையாளர்களுக்கு நடமாடும் சேவையாக நடத்திச் செல்லப்படும் அலுவலகங்கள் அல்லாது நிரந்தர கடமைக்ககாக அலுவலகத்தின் தேவை அவசியமாக உள்ளது.

**(ஈ) இனங்காணப்பட்ட ஏனைய குறைபாடுகள்**

---

(i) அலுவலக செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு உடைந்த மேசைகள் கதிரைகள் காணப்படுகின்றமை.

(ii) தொழில்நுட்ப உபகரணங்கள் காணப்படாமை.

(iii) ஆரோக்கிய வசதிகள் இல்லாமை.

(iv) தமது கடமைகளை நிறைவேற்றும் வரை பொது மக்களுக்கு தரித்திருப்பதற்கு போதியளவு இடவசதிகள் இல்லாமை உட்பட ஆசன வசதிகள் காணப்படாமை .

(v) புதிய தொழில்நுட்ப மற்றும் அலுவலக நடைமுறைகள் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சிகள் காணப்படாமை

(vi) போதியளவு அலுவலக எழுது கருவிகள் கிடைக்காமை

## 3.4 பொது அவதானிப்புக்கள்

-------------------------------

**சுற்றாடல் அவதானிப்பு**

(அ) மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவு வேகமாக நகரமயமாக்கல் மற்றும் குடியேற்றத்துக்கு உள்ளாகி வரும் பிரிவாகும். இந்தப் பிரிவில் பூமி பயன்பாட்டில் வணிக, வர்த்தக, குடியிருப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு, விவசாய நடவடிக்கைகளுக்கு காண்பிக்கும் ஆர்வம் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. மொரட்டுவை பிரதேசத்துக்கு எழிலூட்டியவாறு, 21 கிராம சேவையாளர் பிரிவுகளினூடாக பெருக்கெடுத்துப் பாயும் பொல்கொட ஆற்றின் சூழல் சமநிலையைப் பேணியவாறு, பல்லுயிர் அமைப்பைப் பாதுகாக்கவும் பொருளாதார மற்றும் சமூக ரீதியான மானிட இருப்பை நிலைத்திருக்கச் செய்வதற்கும் இந்த ஆற்றின் மூலம் அதிகளவிலான நன்மைகள் கிடைக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் காணப்படும் இந்த நீர் மூலாதாரத்தை அண்டியும் பல சிக்கல்கள் எழுந்துள்ளன.

(ஆ) 1980 இன் 47 ஆம் இலக்கத் தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24 (இ) மற்றும் 24 (ஈ) பிரிவுகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ள பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் காணிகளை நிரப்புதல் மற்றும் நிர்மாணித்தல், ஆற்றில் காணப்படும் சதுப்பு நிலத் தாவர அமைப்புகளை அழிப்பதன் காரணமாக, பல்லுயிர் அமைப்புக்கு பாதிப்புகள் ஏற்படுதல், முறையற்ற விதத்தில் கழிவுகளை நீர் மூலாதாரங்களில் கொட்டுதல், சல்வீனியா, ஆகாயத் தாமரை போன்ற மோசமான நீர்க் களைத் தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பரவல், சட்டவிரோதமான விதத்தில் மணல் அள்ளுதல் போன்ற செயற்பாடுகளால் இந்தச் சுற்றாடல் அமைப்பு அழிவுக்குள்ளாகும் ஆபத்துக்கு முகம் கொடுத்துள்ளது. இது குறித்து மொறட்டுவ பிரதேச செயலகத்தினால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4 பரிந்துரைகள்

-------------------

(அ) பொது மக்களுக்கு மிகவும் செயற்திறனான மற்றும் ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு முடியுமான வகையில் உரிய திருத்தங்களுடன் பிரஜைகள் சாசனத்தை ஒவ்வொரு அலுவலகத்திலும் காட்சிப்படுத்தல் மற்றும் பிரதேச செயலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பாக மக்களுக்கு தெரியப்படுத்துதல்

(ஆ) கொழும்பு மாவட்ட செயலகத்தின் சகல கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் காணப்படும் பொதுவான சிக்கலொன்றாக உள்ள சிறுவர் முதல் பெரியோர் வரை போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதை தவிர்ப்பதற்கு அரச அனுசரணையுடன் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாக சமூகத்திற்கு அறிவூட்டுதல் மற்றும் அடிமையான நபர்களை புனர்வாழ்வளிப்பதற்காக தொடர்புபடுத்தல்

(இ) பிரஜைகள் சாசனம் தொடர்பாக உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட வேண்டியதுடன் பொது மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான தகவல்களை காட்சிப்படுத்த வேண்டும். (அறிவித்தல் பதாகை, இணையத்தளத்தின் மூலம்)

(ஈ) அரசின் பங்களிப்புடன் கிராம சேவையாளர்களுக்கு கடமைகளை நடாத்திச் செல்லும் வகையில் கிராம சேவையாளர் பிரிவினுள் நிரந்தர பொருத்தமான அலுவலகமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகளை செய்து கொடுத்தல்.

(உ) கிராம சேவையாளர்களுக்கு கிராம சேவையாளர் பிரிவு அடிப்படையில் தகவல் முறைமையொன்றை பேணிச் செல்வதற்கு தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதன் மூலம் பொது மக்கள் நலனுக்காக நிர்வாக தீர்மானமொன்றை எடுப்பதற்கு தேவையான சரியான செயற்திறனான தகவல் முறைமையொன்றை உருவாக்குதல்

(ஊ) பிரதேச செயலகங்களினுள் கடமைகளை மேற்கொள்வதற்கு தேவையான இடவசதிகள் மற்றும் வசதிகளை வழங்குதல்

(எ) பிரதேசத்தில் காணப்படும் முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு முறையான பயிற்சியுடனும் அனுபவமுள்ள ஆசிரியர்களை வழங்குதல் மற்றும் முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாக பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை செயற்பாட்டினை விரிவுபடுத்துதல்

(ஏ) கொழும்பு மாவட்டத்தில் காணப்படும் பகல்நேர பராமரிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்வதை பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஒப்பம்./டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டப்லியு .பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

2020 திசெம்பர்....31..... திகதி